விலை ரூபா : 2/-

# நாணயம்

நாணயம் — Naanayam

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சம்மேளன வெளியீடு.

மலர் VOL 2 ★ ஆவணி - புரட்டாதி AUGUST – SEPTEMBER 1988 ★ இதழ் NO 5

# சர்வதேச உதவி கிடைக்காவிட்டால் இந்நாட்டு பொருளாதாரம் கூட்டுறவின் மீதே தங்கியிருக்கும்

"சர்வதேச உதவிகள் கிடைக்காவிட்டால் இந்நாட்டுப் பொருளாதாரம் கூட்டுறவின் மீதே தங்கியிருக்கும்".

கூட்டுறவின் தேசிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய கௌரவ கூட்டுறவுப் பிரதி அமைச்சர் திரு. ஆர். எம். கருணரத்ன அவர்கள் 66 வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தை நினைவுகூரும் விழாவில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறினர்.

"66வது சர்வதேசக் கூட்டுறவு தினத்தையொட்டி கூட்டுறவு அமைச்சும், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையும் ஒன்று சேர்ந்து நீர் கொழும்பு கோட்டை அரங்கில் அண்மையில் நடத்திய விழாவில் தொடர்ந்து சொற்பொழிவாற்றிய பிரதி அமைச்சர் அவர்கள், ''இன்று கூட்டுறவை நடத்திச் செல்லுதல் மிகவும் கஷ்டமான செயல்'' என இங்கு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. அவற்றுள் பிரதான இடத்தை வகிப்பது ஊழியர்களின் சம்பளப் பிரச்சினையாகும். நாம் அது பற்றி நடவடிக்கை எடுக்கிறோம். கூட்டுறவு ஊழியர்கட்கு போதிய அளவில் சமபளத்தை அதிகரிப்பதற்கு நாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளோம்'' எனக் கூறினர். தொடர்ந்து அவரது உரையில் மாகாணச் சபைகளின் மூலமே கூட்டுறவின் 90% மான அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படுகின்றன. அவை மூலம் புதுச் சட்ட திட்டங்கள் கொண்டு வரப்படும். அப்பொழுது இலங்கைக் கூட்டுறவு இயக்கத்திற்குள் புதிய ஒரு நிலையும் உண்டாகிவிடும் எனபதில் ஐயமில்லை.

''இன்று உலகில் ஐந்தாவது வல்லரசாக மாறியுள்ள இந்தியா, அந்த நிலைமைக்கு வருவதற்கான காரணம், கூட்டுறவு தான் என்பது நாம் அங்கு பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டன. ஆகவே, எமது நாடும் கூட்டுறவு மூலம் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்'' என்று கூறினர்.

## தெற்கிலிருந்து கூட்டுறவுடன் இணைந்த தஹம்சிரி

மாத்தறை மாவட்டத்தின் கூட்டுறவுக்கும் 'தஹம்சிரி' எனும் பெயருக்கும் இடையில் அப்பகுதிக் கூட்டுறவாளர்கள் அவ்வளவு வித்தியாசம் காணவில்லை தஹம்சிரி அவ்வளவு நெருக்கமான வாழ்க்கையிலேயே கூட்டுறவுடன் கொண்டிருந்தார்.

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் பள்ளி ஆசிரியர் ஒருவராக இருந்து கொண்டு கூட்டுறவுடன் இணைந்த மாத்தறை, இக்வெல்லை மாலியத்தனையைச் சேர்ந்த திரு. க. கி. தஹம்சிரி தென்பகுதியின் சிறந்த கூட்டுறவுத் தலைவராக விளங்கினர்.

மாத்தறை/ பம்பரத்த விஜய வித்தியாலயத்திலிருந்து

(7 ஆம் பக்கம் பார்க்க)



திரு. க.கி. தஹம்சிரி


## மக்களுக்கு நிரந்தரமான வருவாயைத் தரக்கூடிய பொருளாதார திட்டமிடல்களை சி.க.கூ. மூலமாக செய்ய வேண்டும்

அண்மையில் எமது பிரதேச கல்வி நிலையம் எளிமையான முறையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இவ் விழாவில் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அவ் விழாவினைத் தொடர்ந்து மாற்று முகவர்களுக்கான பயிற்சி வகுப்பு பயிற்சி நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. எஸ். சுவாமிநாதன் 'திட்டமிடல்' என்னும் விடயம் தொடர்பாக விரிவுரையாற்றினர். அவரது உரையில் மனிதனது அடிப்படைத்தேவைகளை எவ்வாறு திட்டமிட்டு பெறவேண்டும் என்பதுடன் மக்களுக்கு நிரந்தரமான வருவாயைத் தரக்கூடிய பொருளாதாரத் திட்டமிடல் சிககூ மூலமாகச்

(7ஆம் பக்கம் பார்க்க)



பிரதேச நிலையம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படுகிறது.

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாணயம்

## மலையகத்தில் சிகசு சங்கங்கள்

இலங்கை மக்கள் மத்தியில் சமூக பொருளாதாரத் துறைகளில் புதிய மனோபாவங்களை ஏற்படுத்தி இன்று அநேக துறைகளின் கவனத்தை ஈர்ப்பதில் சிகசு சங்கங்கள் வெற்றி கண்டுள்ளன. இன்று அதிகமான பொது வேலைத் திட்டங்களில் கூடுதலாக மக்களின் பங்குபற்றல் இடம் பெறுவதின் மூலம் இது உண்மைப் படுத்தப்படுகின்றது.

கடந்த 10 ஆண்டு காலத்தில் சிறிய அமைப்பாக இருந்த சிகசு, பிரமாண்டமான அளவில் பெரு நன்மைகளை மக்களுக்கு அளிக்கக் கூடிய ஒன்ருக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் வளர்ச்சியை மதிப்பீடு செய்து கொள்வதன் மூலம் அதன் எதிர்காலப் போக்கை நிர்ணயித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சமூக பொருளாதார துறைகளில் பின் தங்கி இருக்கும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு செயற்பட்ட சிகசு அமைப்பு கண்ட வெற்றியுடன் நின்றுவிடாது. இதுவரையில் பெரும்பாலான மக்கள் இவ்வேலைத்திட்டத்தில் கலந்து கொள்ளப்படாது இருந்த தோட்டப்பகுதியில் உள்ள தமிழ் பேசும் மக்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டியது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அநேக மக்கள் தவருன மனோபாவங்களிற்கு இலக்காகி இருந்தனர். இம் மக்கள் அப்பகுதி கூட்டுற வாளர்களுடன் கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய இணைக்கப்படுவது. முக்கிய அம்சமாகும் தொழில் முறையில் மிகவும் பின் தங்கியும், கடினமான வாழ்க்கையினை வாழ்ந்து வந்த இந்த மக்கள் எதிர்பார்த்த நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய் விட்டது. பிரஜா உரிமை இல்லாது இருந்த நிலையினுல் அவர்கள் சமமான உரிமைகளைப் பெற முடியாது போய் விட்டது. இன்று இலங்கையில் ஏனைய பிரதி நிதிகளுடன் செயற்படக்கூடிய நிலையினை சி. க. கூ. சங்க அமைப்பினூடாக பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் வெற்றியை எட்டிய நிலையில் உள்ளது.

இதுவரை காலத்தில் தோட்டப்பகுதியில் உள்ள தமிழ் பேசும் மக்கள் தமிழர்கள் என்றே வேறுபட்டு வாழ்ந்த காலம் மாறி, தமிழ் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அப்பகுதியினைச் சேர்ந்த ஏனைய கிராம வாசிகளுக்கு மிடையில் இணைப்பை ஏற்படுத்தி சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்க, அவற்றைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழிகளைத் தேடுவதற்கு ஒன்றிணைக்கப்பட்ட மேடை அமைப்பு ஒரு வெற்றி எனக் கருதலாம். தோட்டப் பகுதிகளுக்கான வேலைத்திட்டத்தில் வேகமாக விரிவடைவது இக் கருத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதாக அமைகின்றது.

சிகசு அமைப்பின் தோட்டப் பகுதிச் செயல் திட்டங்களை சமூக ரீதியாக நோக்குபவருக்கு, மிகவும் முக்கியமான அறிகுறிகள் தென்படுகின்றன அதாவது, அவ்வாறுன வேலைத்திட்டங்களில் மூலதனத்தை ஏற்படுத்துவதிலும் பார்க்க, நாட்டினை எதிர்நோக்கியுள்ள பாரிய சமூகப் பிரச்சினைகளுடன் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் தடைகளை நீக்கி சகலரக மக்களையும் பரவலாக ஒன்றிணைது இன, மத, தர அடிப்படையில் வேறுபடாது உண்மைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய இவ்வேலைத் திட்டங்களில் வெற்றி காணக்கூடியதாக இருக்கும்.

மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய சகல பிணக்குகளையும் இவ்வமைப்பினூடாக எதிர்வரும் பத்தாண்டு காலத்தில் வெற்றிகரமாக செயல்படுத்த உறுதி கொண்டுள்ளது.

## மண்முனை தெற்கு எருவில் பற்று சிகசு சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கட்கான கருத்தரங்கு

களுவாஞ்சிக்குடி, பெரிய கல்லாறு, களுதாவளை, எருவில் கிராமங்களிலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்று ஆவணி மாதம் 9-ம் திகதி பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமான இக் கருத்தரங்கிற்கு இலங்கைச் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி திரு. எஸ். இராஜரெட்னம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினுர். மேற்படி கருத்தரங்கில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கூட்டுறவு வங்கிகளை அமைத்தல், உதவிச் செயலாளர்களை நியமித்தல், வறிய அங்கத்தவர்களது வருமானத்தை உயர்த்துவதற்கான திட்டங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் சிகசு சங்கப் பொதுக்கூட்டம்

மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் சிகசு சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவி செல்வி ஞானமணி நடராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு விசேட விருந்தினர்களாக. யாழ் மாவட்ட சிகசு சமாசமுன்னை நாள் மாவட்டச் செயலாளர் திரு.லோ. வாகீசன் அவர்களும்புங்குடுதீவுபிராந்தியகூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், திரு. எம் யேசுராஜா அவர்களும், வேலணை பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. ஓ. நாகேஸ்வரனும் வருகை தந்திருந்தனர்.

இக் கூட்டத்தின் ஆரம்பத்தில் அமரத்துவம் அடைந்த திருமதி வேதவல்லி கந்தையாவின் ஆத்ம சாந்திக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினர்கள் திரு. லோ. வாகீசன். ''சமாசத்தின் கடன் திட்டங்களின் அங்கத்தவர் பங்கும் பயனும்'' திரு. எம். யேசுராஜா ''சிகசு சங்கங்களின் கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்தி'' திரு. ஓ. நாகேஸ்வரன் ''அங்கத்தவர்களின் பங்களிப்பும் சங்கத்தின் தொழிற்பாடும் என்ற விடயங்கள் பற்றிக் உரையாற்றினர்.

இக்கூட்டத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செல்வி ஞானமணி நடராஜா தலைவியாகவும் செல்வி விஜயராணி சண்முகலிங்கம் உபதலைவியாகவும், செல்வி லோகேஸ்வரி திருநாவுக்கரசு செயலாளராகவும், செல்வி வாலாம்பிகை சிவசரணம் பொருளாளராகவும், செல்வி ரோகிணி விநாயக ரத்தினம், திருமதி இராசம்மா கணபதிப் பிள்ளை, திருமதி புவனேஸ்வரி சிவரெட்ணம் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கண்டி, மாத்தளை பகுதிகளில் மலையக தொழிலாளர்க்கான கருத்தரங்கு

கடந்த மாதம் கண்டி மாவட்ட சிகசு சமாசத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட மாற்று முகவர்களுக்கும் தொழிற் சங்கத் தலைவர்களுக்கான கருத்தரங்கில் சம்மேளனத்தின் உதவிச் செயலாளர், வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து உரையாற்றினுர்கள். அதனைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற கலந்துரையாடல் சிகசு சங்கம் தொழிற் சங்கத்திற்கு எவ்வகையிலும் போட்டியான ஒரு ஸ்தாபனம் அல்ல என்பது தெளிவாகியது. அதனைத் தொடர்ந்து கலந்து கொண்ட தொழிற் சங்கப் பிரமுகர்கள் சிலர் தங்கள் பகுதியில் சிகசு சங்கங்கள் மலையக மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாத அமைப்பு என்று கருத்துத் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில் மலையகத்தில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக சிகசு சங்கங்கள் உருவாகி வளர்ச்சியடைந்து வருகின்றன. இந் நடவடிக்கையில் மாவட்ட சிகசு சமாசம் கூடிய அக்கறை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் இவ்வேலைத் திட்டத்திற்கென இரு மாற்று முகவர்கள், அலவன்ஸ் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எல்கடுவ, உன்னஸ்கிரிய தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கடந்த 9 மாத காலமாக மாற்று முகவர்களாக பயிற்சி பெற்றவர்கள் இங்கு மாதாந்தம் மாற்று முகவர், நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான, தலைமைத்துவப் பயிற்சி, கணக்கு வைப்பு பயிற்சி என்பன கிரமமாக நடைபெற்று வருகின்றன. இப் பயிற்சி நெறிகளினை சம்மேளனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் எம். எம். ரஜனி, நெறிப்படுத்தி வருகின்றுர். சமாஜத்தின் தலைவர், செயலாளர் வெளிக்கள உத்தியோகஸ்தர் காட்டும் அதிக அக்கறையும் ஒத்துழைப்புமே சிறந்த பலாபலன்களை காட்டுகின்றன.

## பனிக்கங்குளம் சி.க.கூ. சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

பனிக்கங்குளம் சி. க. கூ. சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 20,0587 வனிக்கங்குளம் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு ஒட்டுசுட்டான் பிரிவுக்கு பொறுப்பான சி.க.கூ. சங்க சமாச வெளிக்கள உத்தியோகஸ்தர் திரு. நா. ஜெபனேசன் அவர்கள் கலந்து கொண்டு சங்கத்தின் செயற்பாடு பற்றி விளக்கமளித்தார். கூட்ட இறுதியில் நடப்புவருட நிருவாகக்குழு தெரிவுசெய்யப்பட்டது. செல்வி மு. தேவமாலினியின் நன்றியுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.


நாணயம்

இல. 3/3, எட்மண்டன் ரோட்,
கொழும்பு–06.
தொலைபேசி ; 553005
செய்திப்பத்திரிகை : "நாணயம்"
ஆசிரியர் :
எம். எம். ரஜனி
வெளியீடு :
சி. க. கூ. ச. சம்மேளனம்
பத்திரிகைக் குழு :
திரு. எஸ். ஞானப்பிரகாசம்
திரு. எஸ். ராஜரட்ணம் பீ. ஏ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குறுக்கெழுத்துப் போட்டி இல : 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச 1 | | மே 7 | | | 4 |
| | ■ | | ■ | | |
| 2 | | | ■ | | |
| | | | 3 | | ச |
| ம் | | | 5 | | ■ |
| ■ | | | அ 6 | | |

பெயர் :........ ................ ... ........................ ....

முகவரி :............... ... ........................................ ........

........ ........................... ................................

மாவட்டம் : ..................... .. ....... ..........,... ... ......

...................................... . ......

திகதி :-- கையொப்பம்.

### கவனத்திற்கு :

★ இப்போட்டியில் மாணவர்கள், சி. க. கூ. சங்க அங்கத்தவர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

★ ஒருவர் ஒரு கூப்பனை மாத்திரமே அனுப்பலாம்.

★ கூப்பன்கள் தபாலட்டையில் ஒட்டப்பட்டு, பாடசாலை மாணவராயின் பாடசாலை முகவரியும், கடனுதவு சங்க அங்கத்தவராயின் சங்க முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும். விபரங்கள் குறிப்பிடப்படாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

★ போட்டி சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஆசிரியர் குழுவே பொறுப்பாகும்.

★ சரியான விடையை எழுதும் முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 50/- ம், 2வது, 3வது, பரிசாக ரூபா 25/-தும் வழங்கப்படும்.

★ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ''நாணயம்''
இ. சி. க. கூ. ச. சம்மேளனம்
இல, 3/3, எட்மண்டன் றோட்,
கிருலப்பனை,
கொழும்பு - 6

### குறுக்கெழுத்துப் போட்டி இல : 7

மேலிருந்து கீழ் :-

1. எமது நாட்டு மக்கள் தற்போது விரும்புவது.
4. இலங்கையில் உள்ள கூட்டுறவு மாவட்டங்களில் திருகோணமலையில் சி.க.கூ.................................. இல்லை. (கீழிருந்து மேலாக உள்ளது)
7. இந்து கோயில்களின் முக்கிய வைபவங்களிலும் வேறு முக்கிய வைபவங்களிலும் இதுவும் இடம்பெறும்.
3. கஷ்டப்படும்போது சிலர் எதைச்செய்வது எனத் தெரியாது ..............ப்படுவர். (கீழிருந்து மேலாக உள்ளது)

இடமிருந்து வலம் :

1. இலங்கையில் சிககூ சங்க அமைப்பின் தலைமைச் செயலகத்தை இவ்வாறு அழைப்பர்.
2. இசைத்துறையில் நாடகத்துறையில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது.
3. இறந்தவர் சிலரை.................. நிலையில் அடக்கம் செய்வர். (வலமிருந்து இடமாக உள்ளது]
5. முகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல். (வலமிருந்து இடமாக உள்ளது)
6. வயலில் இன்று ..................... வெட்டுதல் நடைபெறுகின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

### புகழ் பெற்ற ஏழைகள்

தோமஸ் அல்வா எடிசன்
— படகோட்டியின் மகன்

ஆபிரகாம் லிங்கன்
— ஏழை விறகு வெட்டியின் மகன்

சாமுவேல் — ஜான்சன்
— சில்லறை வியாபாரியின் மகன்

ஜோசப் ஸ்டாலின்
— செருப்பு தைப்பவரின் மகன்

கிரகர் மென்டல் —
— ஏழை விவசாயியின் மகன்

கு. ஜெயகௌரி
வவுனிக்குளம்/சு. த. க பாடசாலை

## மாணவர் சங்கம்

37. எஸ். ஜீ. காலித், கல்முனை சாஹிறு கல்லூரி அம்பாறை.
38. உதயகுமாரி பசுபதி மு/மல்லாவி மகாவித்தியாலயம் முல்லைத்தீவு.
39. ஏ. எல். ஹனீபா க/பதியுதீன் மகளிர் வித்தியாலயம் கண்டி.
40. பா. பாலசுந்தரம் வவு/பூவரசன்குளம் மகாவித்தியாலயம் வவுனியா.
41. இஹாப் மு. இக்பால், இந்துக் கல்லூரி கொழும்பு 4.
42. எம். ஏ. எம். குசைன் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி/மன்னார்

## குறுக்கெழுத்துப் போட்டி இல 6
### சரியான விடைகள்

இடமிருந்து வலம் ;

1. வீடமைப்பு 3. காப்பு 5. தார் .
6. கருவாடு 7. காலை 8. துணிவு

மேலிருந்து கீழ் :

1. பீஞகாது 2. புனர்வாழ்வு 3. புகழ்

## குறுக்கெழுத்துப் போட்டி இல 5 இல் பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகள்

1 ஆவது பரிசு ரூபா 50/- பெறுபவர்
ஜனுபா ஹன்னு
க/பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் மகாவித்தியாலயம்
கண்டி.

2 ஆவது பரிசு 25/- பெறுபவர்
திரு. த. விஜேந்திரா
ஈச்/கன் ப. நோ. கூ. சங்கம்
வவுணதீவு, கற்குடா,
மட்டக்களப்பு.

3 ஆவது பரிசு 25/- பெறுபவர்
ஜனுப் எம். எம். எம். ஹசன்
மே/பா. மன்/மூர்வீதி றகுமத் கூ. சங்கம்
மன்னார்.

## ரமணனின் சேமிப்பு

ஏழாலை தெற்கில் ரமணன் - ராஜேஸ்வரன் வசிக்கின்றார். அவருக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கின்றார்கள். அவர் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் வருடம் 3 இல் படிக்கின்றார். அவரது அம்மாவும் அப்பாவும் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் தொழில் பார்க்கின்றார்கள். அவர்கள் ஏழாலை மேற்கு சிறி விநாயகர் சி. க. கூ. சங்க அங்கத்தவர்கள்.

தற்போது ரமணன், ஏழாலை மேற்கு சிறி விநாயகர் சி.க.கூ. சங்கத்தின் மாணவர் சேமிப்புத் திட்டத்தில் ஓர் அங்கத்தவராக சேர்ந்துள்ளார். இதனை அண்மையில் அவரது வீட்டிற்கு நான் சென்ற போது, ஆவலுடன் எனக்குக் காட்டிய பாஸ் புத்தகத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். பாஸ் புத்தகம் ஒரு கிழமைக்கு முதல் அங்கத்தவராகச் சேர்ந்து 11 ரூபா வைப்புச் செய்துள்ளார் என்பதைக் காட்டியது. மேலும் அப் புத்தகத்தில் ஒரு தபாலுறையில் சில்லறைக் காசுகொஞ்சம் இருந்தது. அதனையும் சனிக்கிழமை தான் வங்கியில் வைப்புச் செய்ய இருப்பதாகக் கூறினார்.

அப்போது அங்கு வந்த அவரது மாமா ஏதோ பெரிய வங்கியில் தொகையான காசு போட்ட ஆள் போலக் காட்டுகின்றார் என்று நகைச் சுவையாகக் கூறினார். ரமணனின் அம்மா அதற்கு கொடுத்த விளக்கம், 'நாங்கள் வெளிநாடுகளில் உழைக்க வில்லை. எங்கள் நாட்டில் கொஞ்ச வருமானம் தான் எமக்கு கிடைக்கின்றது. எங்களது பிள்ளைகளும் கொஞ்சம் கொஞ்சமாக எங்களது சி. க. கூ. வங்கியில் தான் வைப்புச் செய்து அதில் இருந்து கிடைக்கும் நன்மைகளால் வருங்காலத்தில் வசதியாக வாழ முடியும் என்றார்.

எனவே தம்பிகளே! தங்கைகளே! நீங்களும் ரமணன் போல மாணவர் சேமிப்பில் அங்கத்தவராகலாம் அல்லவா? ...........

ரஜி அக்கா

### மாணவர் சங்கம்

இன்று மாணவர் மத்தியிலே உள்ள திறமைகளை வெளிக் கொணர்வதற்கு மாத்திரம் மாணவர் சங்கம் என்ற நிலையை மாற்றி மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே சிக்கனத்தை கையாண்டு, சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும் மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய மாணவர் சங்க அமைப்பொன்றை அகில இலங்கை ரீதியாக அமைத்து அவர்கள் மத்தியிலே உள்ள பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தவும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும் ''நாணயம்'' தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தில் 18 வயதுக்கு குறைந்த மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம். சேர விரும்புவோர் மாணவர் சங்க விண்ணப்பக் கூப்பனை நிரப்பி ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

கூப்பன் :

## மாணவர் சங்கம்

பெயர் :- ......................................................................

முகவரி :-......................................................................

பிறந்த திகதி:-.................... வகுப்பு :- .........

பாடசாலை :- ..................................................................

மாவட்டம் :- ...................................................................

கிராமத்திலுள்ள சி. க. கூ. சங்கத்தின் பெயர் :- ...........

மேலே தரப்பட்ட விபரங்கள் சரியானவை. நான் இச்சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

.....................................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்

# கடந்த தசாப்

[இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தின் 1988-ம் ஆண்டுக்கான பொதுச் சபைக் கூட்டம் ஒக்ரோபர் 8-ம் திகதி இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற உள்ளது. இதில் சிகசு சமாசப் பிரதிநிதிகள் இருநூறு பேரளவில் பங்கு பற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பத்து வருட காலத்தில் சிகசு சங்கங்களின் வளர்ச்சியில் அடைந்த பலாபலன்களை ஆராய்வது அவசியமாகின்றது. வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் 7 நடைபெற்றுள்ளன. இம்முறை நடைபெற உள்ள 8-ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அடுத்துவரும் பத்து வருட காலத்திற்கான வேலைத் திட்டத்தினை தயாரிக்கும் போது, கடந்த பத்து வருடங்களில் நாம்பெற்றுக் கொண்ட அனுபவங்களை அறிந்து கொள்வது பயனுடையது என்று கருதப்படுகின்றது.

கடந்த பத்து வருடத்தில் சிகசு சங்கங்களின் செயற்பாடுகளையும் அவதானித்தே எதிர்வரும் காலத்திற்கான வேலைத் திட்டத்தினை தயாரிக்க வேண்டிய பொறுப்பு சகல சிகசு அங்கத்தவர்களுடையது என சொல்லித் தெரியவேண்டியதில்லை.]

1978-ம் ஆண்டு கேகாலை வல்கமுவ என்ற இடத்தில் சிகசு சங்கங்களின் புனரமைப்பு தொடர்பான மாநாடு நடைபெற்று 10 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இம் மகாநாட்டின் பின்னர் சிகசு அங்கத்தவர்களுக்கு இவ்வமைப்பில் பற்றும் செயற்பாடுகளில் ஆர்வமும் ஏற்பட்டது என்பது பற்றி புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. 10 வருட காலம் முடிந்துவிட்டது என்ற காரணத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காது. அக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களினை கவனத்தில் கொள்ள வேண்டும். சிகசு அமைப்பின் 67 வருட செயற்பாட்டின் விஸ்தீரணம் கடந்த 10 வருடத்தில் பெருமளவிலான அபிவிருத்தியின் பயனாக அதனது உருவமே முற்றுகமாற்றமடைந்தது மிகவும் முக்கியமான தெனலாம். சிகசு சங்கங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு கிராமிய மக்கள் பங்கு கொள்ளக் கூடிய நிலையில் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் முக்கியமான தொன்றாகும். மிகவும் பின் தங்கிய நிலையிலும், கஷ்டமான சூழ்நிலையிலும் உள்ள இப் பகுதியில் செயற்றிட்டங்களை செயற்படுத்தும் போது பயன் பெறும் தனி அங்கத்தவர்களின் உண்மையான நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை தொடர்ச்சியாகக் கண்டு கொள்ளக் கூடியதும், அதனை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் உண்டு.

எனினும் சிகசு சங்கங்கள் பல்வேறு வகையான கஷ்டத்தின் மத்தியில் 10 வருட காலத்தில் வெற்றி அடைந்துள்ளது என்றே கூறலாம். சிகசு சங்கங்களினுல் ஜனநாயக ரீதியான பங்கு பற்றலுடன் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் இலங்கையில் மகத்தான தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது என்பது நல்ல ஒரு உதாரணம் ஆகும்.


இற்றை வரைக்கும் கிராமிய மட்டத்தில் 5600 சிகசு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளமையும், அவற்றில் தொடர்ச்சியாக மாதாந்தக் கூட்டங்கள் நடத்தி அவர்களின் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு அதற்கான பரிகாரங்களையும் பல வழிமுறைகளூடாகத் தேடிக் கொள்வதுண்டு.

புனரமைப்பு செயற்றிட்டங்களில் 10 ஆண்டு காலம் முடிவடைந்து எதிர் வரும் 10 ஆண்டுகளை எதிர் நோக்குகின்ற போது, இந் நூற்றுண்டின் இறுதியினையும் சிந்திப்பது அவசியமாகின்றது. எனவே கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்வதும் எதிர் காலத்தில் மக்களின் பங்களிப்பைத் தொடர்ச்சியாக ஏற்படுத்திக்கொள்வதும் இன்றியமையாததாகின்றது. கிராமிய மட்டத்தில் பொதுவாக அங்கத்தவர்களது சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை சிகசு சங்கங்களூடாக நடைமுறைப்படுத்த முன்வருவது ஒரு முக்கியமான விடயம் ஆகும்.

நுகர்ச்சி, கைத்தொழில், இயந்திர மயமாக்கல், நகரமயமாக்கல் போன்ற சமூகமாற்றங்களிற்கு தங்களை அறியாமலே இழுத்துச் செல்லப்பட்டு வரும் இளைஞர்களை சிகசு சங்கங்களின் முயற்சிக்கும் ஈர்க்கப்படுவது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

எதிர் வரும் 10 வருட காலத்தினுள் பொது மக்களின் பங்கு கொள்ளலுடன் நடைமுறைப் படுத்தும் திட்டம் என்பதில் சிகசு சங்க முயற்சியின் அவதானிக்க வேண்டிய விசேட பகுதி ஒன்று உள்ளது. அதாவது குறைந்த வருமானம் உடைய வறுமை என்ற பொது எதிரியிடம் இருந்து நிரந்தரமாகப் பாதிக்கப்படும் மக்களின் எதிர்பார்ப்புக்களை, வருங் காலத்தில் அவர்கள் அடையக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதாகும்.

இதற்காக, மக்களின் பங்கு பற்றுதல் மிகவும் அவசியமாகும். சகல முதல் நிலைச் சங்கத்திலும் (ஆரம்ப சங்கங்களின்) அவற்றின் பொதுச் சபைக் கூட்டங்களிலும் சங்கத்தின் எல்லைப் பரப்பினுள் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட சகல பிரஜைகளையும் சிகசு சங்கங்களின் அமைப்பினுள் கொண்டு வருதல் வேண்டும். பல சிக்கல்கள் மத்தியில் இருக்கும் மனித வர்க்கம் சாதி, குலம், மதம், வருமானம், அந்தஸ்து போன்றவற்றினுல் பிரிக்கப்பட்டுள்ளது.



அபிப்பிராயங்கள், யோசனைகள் உதயமாவது பற்றி கலந்துரையாடுகின்றனர்.

இவ்வாறாக ஒரு சமூகத்தின் மத்தியில் ஒரு ஒற்றுமையைக் கொண்டுவருவது தலைமை வகிப்பவர்களுக்கு உள்ள ஒரு சவாலான நிலையாகும்.

பொது மக்களின் பங்கு கொள்ளலினை பெறுமதியாகக் கருதும் அடிப்படையில் செயற்படுத்தப்படும் நிதி, முகாமை, அமைப்பு ஆகிய சிகசு முயற்சிகளில் பொது மக்களின் பங்கு கொள்ளல் நூற்றுக்கு தொண்ணூறு வீதமாக இருப்பதில் திருப்தியடைந்து விட முடியாது. அங்கத்தவர்கள் தங்களது உள்ளத்தால் ஒருவரை ஒருவர் விசுவாசிக்கும் அடிப்படையில்தங்களது வளங்களைத் திரட்டி நிதி வளங்களைப் பாதுகாப்போம் என்ற உறுதியினையும் இம் முயற்சியில் அங்கத்துவம் வகிப்பதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே 1978ம் ஆண்டிற்கு முன்னர் செயற்படுத்தப்பட்டு வந்த சம்பிரதாயமான நடைமுறைகளாகிய மாதம் ஒரு முறை செயற்பாடுகளிலும், நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தலுக்கு பதிலாக 1978-ம் ஆண்டு புனரமைப்புக்குப் பின்னர் விசுவாசம் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொண்டு உறுதியான ஒரு நிதி முகாமை செய்யக் கூடிய ஒரு சிறந்த அமைப்பு என்பது வெளிப்படுத்தப்பட்டது. இதற்கமைய கடந்த 10 ஆண்டு காலத்திற்குள் சுமார் 700 சிகசு சங்கங்கள் தோன்றியுள்ள போதும் எஞ்சியுள்ள சுமார் 4900 சங்கங்கள் எதிர் காலத்தில் தமக்கென ஒரு நிரந்தர அலுவலகத்தை ஸ்தாபித்து தங்களது செயற்பாடுகளுக்காக கிழமை நாட்களில் அதனைத் திறந்து வைத்து அங்கத்தவர்களுக்கு உச்ச வசதிகளை அளிப்பதற்கு தயார் செய்ய வேண்டும்.



திறமை முன்னேற்றத்துக்கு முதல் இடம் கிடைக்

சிகசு அபிவிருத்தி செய்யும் முயற்சியில் கடந்த 10 ஆண்டு கால வெற்றியில் பெருமையுடன் எடுத்துக் காட்டக் கூடிய இன்னொரு நன்மை யாதெனில் கிராமிய மட்டத்தில் திட்டமிடும் நடைமுறையாகும்.

ஒரு சர்வ கலாசாலையினுள்ளோ அல்லது ஒரு வகுப்பறையினுள்ளோ இருந்து கொண்டோ திட்டம் வகுக்கும் முறைக்குப் பதிலாக கிராமிய மட்டத்தில் இருந்து கொண்டு திட்டமிடுதலின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொண்டு அதற்கான பயிற்சி அளிக்கக் கூடிய ஒரு சிறந்த அமைப்பாக விளங்குகின்றது. இதனுல் கிடைக்கக் கூடிய முதல் நன்மை யாதெனில் மக்களின் உண்மையான தேவை யாதென்பதைப் பற்றி அவர்களது கருத்தைப் பெற்றுக் கொண்டு அக் கருத்தை மையமாகக் கொண்ட குழுக்கள் உருவாகி இம் முயற்சியின் குறிக்கோளை இலக்காகக் கொண்டு செயற்பட வைத்தலே ஆகும்.



சமூகமளிப்பதனுல் சமாதானம், ஒற்றுமை வளர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்தம் கற்பித்தவை...

சியுள்ள
ள் எதிர்
] ஒரு
த ஸ்தா
பற்பாடு
ட்களில்

எனவே கடந்த 10 ஆண்டு காலத்தில் கிடைக்கப் பெற்ற சிறந்த பலாபலன் இது ஆகும்.

மக்களின் பங்கு கொள்ளலுடன்] திட்டமிடல் ஒரு புதிய



டம் கிடைக்கின்றது.

அடைவதற்கான தீர்மானங்களின் மாதிரிகளை அடையாளம் கண்டு கொள்வதற்கான வழி முறைகளையும் அறிந்து கொள்ள வகைசெய்யும் கல்வியுடன் சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்களில் பங்கு கொள்ள நேரிட்டதும் ஒரு முக்கிய அம்சமாகும்.

அது மாத்திரமன்று நடாத்தப்படும் மாதாந்தப் பொதுச் சபைக் கூட்டங்களில் வருடாந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்து கொள்ளவோ, அந்த மாதத்திற்கான இலக்கை அடைந்துள்ளதா என்பதை ஆய்வு செய்துகொள்ளவும் பொறுப்பு எந்தளவு தூரத்திற்கு செயற்படுத்தப்பட்டுள்ளது என்று தேடிக் கண்டு கொள்ளவும், திட்டமிடப்பட்டபடி வளங்

போன்ற நடவடிக்கைகளுக்கு அனுபவங்களும் பிரயோசனம் அளித்துள்ளன.

இதற்கு மேலதிகமாக சிகசு முயற்சியில் நம்பிக்கை, மதிப்பு, உன்னதம், நற்பெயர் முதலியவற்றிற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டதுடன் உட்துறை முகாமைக்கும் நிர்வாகத்திற்கும் கடந்த 10 ஆண்டு காலத்தின் இறுதிப் பகுதியில் ஜீவ நாடிகளாக இருந்ததுஎன்பதுடன்பெருமளவிலான நன்மைகள் கிடைக்கப் பெற்ற துறைகள் எனவும் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றன. முகாமை நிர்வாக ஒழுங்குகள் பற்றி எதிர்வரும் 10 ஆண்டு காலத்தில் மனதில் கொள்கின்ற போது வெளிப் படையாகத் தோன்றும் விடயம் யாதெனில் சங்கங்களின்

உரிய காலத்திற்கு செயற்படுத்தப்பட்டுக் கொண்டு போனால் சங்கநடவடிக்கைகளுக்கு மதிப்பும், கௌரவமும் தானுகவே கிடைக்கின்றது.

சிறந்த க/கு வைப்பு முறை மாத்திரமன்றி ஒழுங்கான க/கு வைத்தலின் மூலம் முன்னேற்றத்தையும் மீளாய்வு செய்து கொள்வதோடு முன்னேற்றத்தை அளவீடு செய்யக்கூடிய இலகுவான முகாமை முறைகளை பின்பற்றிக் கொள்வது பற்றியும் சிகசு சங்கங்கள் எதிர்வரும் 10 ஆண்டு காலத்தில் செய்ய வேண்டியது யாவை என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்

வருடாந்த செயற்பாடுகளினூடாக கிடைக்கப் பெற்ற மிகை உண்மையிலேயே முத

தின் திரட்டிய சொத்தினதும் பொறுப்புக்களினதும் விகிதத்திற்கு ஏற்பனவா? என்பது பற்றி சுலபமாக அறிந்து கொள்ளக் கூடிய முகாமை ஒழுங்குகளைப் பின்பற்றுவதுடன் மூலதன முதலீட்டினை செயற்திறனுடன் கையாளல் முக்கியமாகும்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தும்போது தூரப்பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு இடையில் உள்ள பரவலான இடைவெளியைக் குறைத்து அவர்களை ஒன்றிணைத்து, அபிவிருத்தியை நோக்கி ஒன்றுகச் செல்லக் கூடிய சிகசு வேலைத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்த வேண்டியது முன்னரை விட தற்போது முக்கியமாக உள்ளது. இதற்கான செயல்முறை உண்மையிலேயே மிகவும் முக்கியமானதாகவும் நுட்பமானதாகவும் ஆவதுடன் இருபக்கங்கள் வெட்டும் கத்தியைக் கையாள்வது போலக் கையாள வேண்டும. அரச அபிவிருத்தித் திட்டம் ஒரு குறித்த முறையில் செயற்படுத்த வேண்டுமாயின் அதற்கு சிகசு சங்க முயற்சியூடாகச் செயற்படுத்த முயற்சிக்கும்போது அதன் பயனுக அரசாங்கத்தின் கிளையாகமாறிவிடாது கூட்டுறவு அமைப்பினை பாதுகாக்கக் கூடிய வகையில் செய்ற்படவேண்டும்.

எனினும் அங்கத்தவர்கள் அரசாங்கத்தின் சார்பிலும் கிராமியமட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் பங்கு கொண்டு தமது சக்தியையும் ஆர்வத்தையும் செயற்திட்டத்தில் முற்றும் முழுதாகக்காட்டி செயற்பட்டு வெற்றியை அடையவேண்டும்.

து அங்
வசதி
தயார்

சய்யும்
ஆண்டு
ருமை
ட்டக்
ன்மை
ட்டத்
முறை

லையி
வகுப்
ருந்து
க்கும்
ாமிய
ண்டு
பத்து
ண்டு
க்கக்
மைப்
இத
முதல்
ளின்
ாதெ
ளது
ண்டு
ாகக்
வாகி
களை
சயற்
ம்.

துறையகும். இந் நன்மை பொது மக்களுக்கு மாத்திரமன்று சில வேளைகளில் திட்டம் வகுத்தலினை வகுப்பறை தொழிலாகக் கொண்டவர்களுக்கு, பிரச்சினைகளை நன்கு விளங்கி அவற்றிற்கான தீர்வுகளைக் காண்பது கடினமாக இருந்தது. அவ்வாறுன ஒரு சௌகரியத்தின் மத்தியில் அங்கத்தவர்களைப் பரவலாக்கி அவர்களின் அபிலாஷைகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு குறுகிய கால அல்லது நீண்ட காலத் திட்டங்கள் உருவாகின. அதனுல் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சகல சிகசு சங்கமும் ஆகக் குறைந்தது எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கோ அல்லது 10 ஆண்டுகளுக்கோ நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கையினை திட்டத்தில் நிச்சயித்துக் கொள்ளக்கூடிய தேவை ஒன்று உருவாகியது.

அங்கத்துவத்துக்கு தங்களது அறிவு மட்டத்திற்கேற்ப அபிவிருத்தித் திட்டங்களினைக் கண்டறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதுடன் அபிவிருத்திக் குறிக்கோள்களை



நிறுவனத்தில் சமூக சேவைப்பயிற்சி நடைபெறுகின்றது.

களை உரிய குழுக்களுக்குப் போய்ச் சேரச் செய்வது ஆகும். க/கு வைப்பு முறையின் திறன் ஒழுங்கு முறையாக லீடு செய்யப்பட்ட மூலதனத்தின் எந்தளவு வீதம், சங்கத்



வளர்வதைக்] காணலாம்.

# மகளிர் அமைப்புக்களும்

## மேலதிக வருமான வழிகளும்

(சென்ற இதழ் தொடர்)
மேற்கூறியவற்றிற்கிணங்க கீழ்க்காணும் உதாரணத்தை முன்வைப்பதற்கு விரும்புகின்றேன். பழங்களும் காய்கறிகளும் இலங்கையில் பெருவாரியாக விளைகின்றன. அவை நேரடி உணவாகக் கொள்ளப்படுகின்றன. அல்லது மற்றும் உப உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பண்ணை
|
பயிர்ச் செய்கை
|
அறுவடை
|
கொள்கலன்களில் அடைத்தல்
|
போக்குவரத்துச் செய்தல்
|
சந்தை
|
நுகர்வோர்

குறித்த போகங்களின் போது இப்பொருட்கள் மிகுந்து காணப்படினும் போகமல்லாத காலங்களில் காணப்படமாட்டா. மிகுந்து காணப்படுகின்ற காலங்களில் உற்பத்தியாளருக்கு குறைந்த விலை கிடைப்பதோடு. நுகர்வோர் அதிக விலை கொடுத்து எவற்றைக் கொள்வனவு செய்கின்றனர். எனவே, மகளிர் அமைப்புக்கள் மூலம் உற்பத்தியோடு தொடர்புடைய பணிகளைப் புரிவதுடன் போகமல்லாத காலத்தில் பிரயோசனத்திற்கு எடுக்கக் கூடியவாறு பொருட்களை நீண்டநாட்களுக்கு வைத்துக் கொள்ளக் கூடிய முறைகள் மேற்கொள்ளப்படின் மேலதிக வருமான வழிகளை

அதிகரிக்க அதன் மூலம் வசதி ஏற்படும். சட்னி, தோசி அச்சாறு, கோடியல், ஜெலி ரின்களில் அடைக்கப்பட்ட பழ உற்பத்திகள் ஆகிய பல்வேறு முறைகள் மூலம் இந்நிலையினைத் தோற்றச் செய்ய முடியும்.

கமநல ஆராய்ச்சி, பயிற்சியளிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பின்படி இலங்கையில் சுமார் 5 லட்சம் தொன் உருளைக் கிழங்கு மற்றும் கிழங்கு வகைகள் நுகரப்படுகின்றன எனத் தெரியவந்துள்ளது.

அதே போன்று இப்பண்டங்களின் பொருட்டான கேள்வியும் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாகத் தோன்றுகிறது. பதுளை, நுவர எலியா யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அப்பயிர்ச் செய்கைக்குத் தேவையான காரணிகள் காணப்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் ஓர் ஏக்கரிலிருந்து சுமார் 8 மெட்ரிக் தொண்ணும், பதுளை மாவட்டத்திலிருந்து சுமார் $3\frac{1}{2}$ மெட்ரிக் தொண்ணும், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சுமார் 12 மெட்ரிக் தொண்ணும் உற்பத்தி செய்யப்படுகின்றது. தரத்தைப் பொறுத்தமட்டில் நுவரெலியாப் பகுதியில் விளையும் உருளைக் கிழங்கு மிக உயர்ந்த நிலையில் இருப்பதோடு, அதன்படி உற்பத்திச் செலவும் அதிகமாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு வந்த நிலவு 4

( சென்ற இதழின் தொடர்ச்சி )

அவன் உன் விஷயத்தில் பிரமாதமா நடிச்சுப் போட்டான் என்று வசந்தி கூறவும் வாயை மூடு அவரேன் என்னட்ட நடிக்க வேணும் அவரிடம்படிப்பில்லையா? பணமில்லையா? அழகில்லையா? நடிச்சுத்தான் என்னை மயக்க வேணுமா? என் சொந்த விஷயத்தில யாருமே தலையிட வேண்டாம். என் வாழ்க்கையை நிர்ணயிக்கிற உரிமை எனக்கிருக்கிறது. நீ போகலாம் வெளியே! சுட்டு விரலை வாசல் நோக்கி நீட்டினுள். அவளது விரலையும், அதைத் தாங்கி நின்ற கையையும்,அவளதுமுகத்தையும்மாறி மாறி கண்களில் நீர் மல்க நோக்கிவிட்டு: அவள் காட்டிய திசையை நோக்கிச் செல்லும் போது அவனிடம் நீ கூறிய அழகு, பணம், படிப்பு எல்லாமேஇருக்கிறது மதுரா! ஆனுல் ஆனுல்...! ஒரு மனிதனிடம் தது என்று எண்ணியபடியே சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். அவனும் அதே நேரத்தில் அவளைக் கண்டு விட்டதால் என்னுல் தானே இவள் சித்திரவதைப்பட வேண்டியதாயிருந்தது. திட்டு வாங்க வேண்டியிருந்தது என்று எண்ணியபடியே ஒரு நீண்ட பெருமூச்சுடன் கடந்து சென்றுன் அவள் மரத்துப் போன உணர்வுகளுடன் தனது வேலையைச் செய்து முடித்து விட்டுத் திரும்பும் போது அங்கு பூரணம் வந்து கொண்டிருந்தாள்.

'அங்கபார் வசந்தி' என்று தட்டி வேலியில் எதையோ சுட்டிக்காட்டினுள் பூரணம். எதுவுமே புரியாமல் அவள் காட்டிய திசையை நோக்கிய வசந்தி மையிருன் போன்று மாசு மறுவற்றிருந்த சின்னஞ் சிறிய கருக்குருவி ஒன்று தன்னந் தனியே எதையோ பறிகொடுத்தது போல் உட்காந்து

வசந்தி .. உனக்கு நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன் நீ இன்றிலிருந்து உன்னைச் சுற்றியுள்ள இந்தச் சிறு வட்டத்துக்குள் மட்டும் சிந்தனையைச் செலுத்தி வாழ்ந்து கொண்டிருப்பாயானுல் உனது வாழ்க்கையில் என்றுமே நிம்மதி கிடைக்கப்போவதில்லை. நான் கூறிய அந்தச் சிறிய வட்டத்துக்குள் அடைத்து வைத்திருக்கின்ற உன் இதயத்தை தயவு செய்து அகலத் திறந்து விடு. அது இந்த உலகத்தை ஆராய்ந்து பார்க்கட்டும். அதில் எத்தனையோ ஆயிரக் கணக்கான மனித உயிர்கள் அடிமைச் சிறையிலே அடைத்து வைக்கப்பட்டுத் துன்புறுத்தப் படுவதை உன் இதயக் கண்களால் பார்க்க முடியும். அப்படி நடப்பவற்றைப் பார்த்தால் அந்நியர்களால் துன்பப்பட்டு அடக்கி ஆராயப்படுவதை விட பெற்றெடுத்த தாய் உரிமையுடன் ஏசுவதோ...அடிப்பதோ உனக்குப் பெரிதாகத் தெரியாது. உன்மனம் அதை சாதாரணமாக ஏற்றுக் கொண்டு வாழப் பழகிவிடும் இதனுல் உன் கவலைகளில் பெரும் பகுதி குறைந்த சாதாரணமாக என்னைப் போல் நீயும் வாழலாம் என்று குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தாள் பூரணம்.

(தொடரும்...)

## சிறுகதை

முக்கியமாக இருக்க வேண்டிய ஒன்றே ஒன்று அவனிடம் இல்லை. அதுதான் ''மனிதப் பண்பு'' என்று கூறிவிட்டு தாங்க முடியாத வேதனையுடன் கூடிய விம்மலுடன் வெளியேறினுன் வசந்தி!

சூரியன் அடிவானுக்குள் சரியத் தொடக்கிவிட்டிருந்தான் உக்கிரம் தணிந்து அவனது இளங்கதிர்களால் இயற்கை இளமை அடைந்து விட்டதைப் போல் காட்சியளித்தது. பச்சைப் பசேலென்று பந்தாரமாக வளர்ந்து நின்ற மரஞ் செடிகள் கூட கதிரவன் வீசியெறிந்த தங்கக் கதிர்களால் பச்சைப் பவளம் போல மின்னியது. ஆடு, மாடுகள் யாவும் தத்தமக்கு சொந்தமான உறைவிடங்களை நோக்கிச் செல்ல வீட்டிலே யாரும் இல்லாததால் முற்றத்தில் நின்ற முருங்கை மரத்தில் சாய்ந்தபடி சிந்தனையில் ஆழ்ந்து விட்டிருந்த வசந்தி தம் வீட்டுப் பசுமாடுகளும் பட்டிக்குள் நுழைவதைக் கண்டதும் தான் சுய உணர்வு வரப் பெற்று அவற்றைகட்டிவிட்டு வருவதற்காக பட்டியை நோக்கிச் சென்றுள்.

தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்துவிட்டு ஆண்களும் பெண்களும் இளைஞர்களுமாக அலுத்துக் களைத்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். சிலர் தாம் பாட்டுக் கேட்பதற்காக ரேடியோவையும் கையில் ஏந்தியபடி சென்று கொண்டிருந்த போது எதேச்சையாக திரும்பிப் பார்த்த வசந்தி வீதியில் பூரணத்தின் அண்ணன் சிவபாலன் சென்றதைக் கண்டதும் இவனுல்தானே நான் அடியும் திட்டும் வாங்கவேண்டியிருந்தது. சிறிது நேரம் அதையே உற்றுப் பார்த்தபடி நின்றிருந்த வசந்தி தனது நிலைதான் அதற்கும் வந்ததோ என்று ஒரு விநாடி சிந்தித்து விட்டு பூரணத்தைத் திரும்பிப் பார்த்து ஏன் அதைப் பார்க்கச் சொன்னுய்? என்று கேட்டாள்.

தன்னந்தனியே ஒரு குருவி உட்கார்ந்திருந்தால் அதை இரண்டு சோடிக் கண்கள் பார்க்க வேண்டுமாம். அப்போது தான் அந்தக் குருவிக்கும் நல்வாழ்வு கிடைக்குமாம் அதைப் பார்ப்பவர்களும் கன்னியர்களாக இருந்தால் அவர்களுக்கும்நல்வாழ்க்கை கிடைக்குமாம் என்று பெரியவர்கள் சொல்வார்கள் என்று கூறி விட்டு வசந்தியைப் பார்த்து புன்னகைத்தாள் பூரணம் ஆனுல் வசந்தியின் உதடுகளில் புன்னகையோ...! கண்களில் களையோ...! முகத்தில் மகிழ்ச்சியோ...! இல்லை. அவளது ஊனமுற்ற உணர்வுகளினதும் எந்தவிதமான சுருதியும்இல்லை அவளது சாகடிக்கப் பட்ட உணர்வுகளை முகத்திலும் பிரதிபலிப்பதால் அதைச் சகிக்க முடியாத பூரணம் ஏன் எதையோ பறிகொடுத்த மாதிரி எந்த நேரமும் முகத்தை வைத்துக் கொண்டிருக்கிருய் வசந்தி என்றுள்.

ஒரு பெண் பிறந்த வீட்டில் தான் இருக்கும் வரையும் எதை எதிர் பார்ப்பாளோ அதை அனுபவிக்க முடியா விட்டால் அவள் வேறு எதை பறிகொடுக்க முடியும் தாயன்பைத் தவிர என்று வெறுமையாகக் கூறிவிட்டு பூரணத்தை ஏறெடுத்து நோக்கினுள்.

**செல்வி சி. ஜெயராணி**
மாதர் சி. க. கூ சங்கம்
இரணை இலுப்பைக்குளம்
வவுனியா

## கடன் அந்நியோன்ய உதவி வேலைத்திட்டம்

### வைப்பு அந்நியோன்ய உதவி உறுதியுரை முறை

சி. க. கூ. அங்கத்தவர்களின் சேமிப்பை அதிகரிக்கவும்,அவர்கள் சி. க. கூ. உடன் வைத்திருக்கும் தொடர்புகளை மேம்படுத்தவும், கடன் அந்நியோன்ய உதவி வேலைத் திட்டத்திற்கு மேலதிகமாக அறிமுகப் படுத்தப்படும் பாதுகாப்பு முறையென இதனை அழைக்கலாம்.

### செயற்படுத்தும் முறை

யாராவது அங்கத்தவர் ஒருவர் இறக்குமிடத்து அவ் அங்கத்தவருக்காக அச்சங்கத்தால் கொடுக்கற்பாலதாய பணத் தொகைக்கு சமமான தொகை, அவரால் உரித்துடைமை காட்டப்பட்ட ஒரு தனி ஆளுக்கோ அல்லது தங்கியிருப்போருக்கோ இவ்வேலைத் திட்டத்தின் கீழ் சி க கூ. சம்மேளனத்தினுல் வழங்கப் படும்.

### தொடர்புபடுத்துவதற்கு தகைமை பெறும் அங்கத்தவர்கள்

1. கடன் அந்நியோன்ய உதவி வேலைத்திட்டத்திற்கு தகைமை பெற்ற அங்கத்தவர்கள் இவ் வேலைத்திட்டத்திற்கும் தகைமையுடையவராவர்.

### தகைமை பெறும் வைப்பு மீதிகள்

(அ) சேமிப்பு வைப்புக்கள்.
(ஆ) நிலையான வைப்புக்கள்.
(இ) பங்கு முதல் வைப்புக்கள்.
(ஈ) ஏனைய விசேட வைப்புக்கள்.

### தகைமை பெருத வைப்பு மீதிகள்

(அ) அங்கத்தவர் அல்லாதோரின் வைப்புகள்.
(ஆ) அங்கத்தவரல்லாத தனியாட்களின் வைப்புகள்.
(இ) வரிக் கணக்குகளின் மீதிகள்.
(ஈ) ஆகக்கூடிய தகைமை பெற்ற வைப்பு மீதி ரூபா 50000/-ற்கு மேற்பட்ட தொகை.
(உ) ஆகக்கூடிய வயதெல்லை 70 வருடங்களுக்கு மேற்படுமிடத்து.

### தவணைப்பணங்கள் செலுத்தப்படல்

கடன் அந்நியோன்ய உதவி வேலைத்திட்டத்திற்கு உள்ளது போல் தகைமை பெற்ற முழு வைப்பு மீதிகள் சார்பாகவும் ஒவ்வொரு

**எஸ். இராஜரெட்னம்**
**(இ. சி. க. கூ. ச. சம்மேளனம்)**

1000/- ரூபாவுக்கும் 65 சதம் என்னும் வீதத்தில் மாதாந்தம் சம்மேளனத்துக்கு செலுத்த வேண்டியிருக்கும் இத்தொகை அங்கதத்தவரினுல் பொறுத்துக் கொள்ள வேண்டியதொன்றன்று என்பதுடன் குறிப்பிட்ட சங்கத்தினுல் சங்கத்தின் ஒதுக்கு நிதியிலிருந்து இத்தொகை கொடுக்கப்படல் வேண்டும்.

### இலாபப் பங்கீடு

இவ் வேலைத்திட்டத்திற்கு அமைவாக க. உ. கூ. ச. அங்கத்தவர் ஒருவர் இறக்குமிடத்து மாத்திரமே பின்வரும் அட்டவணைக்கு அமைய உரிய இலாபப் பணம் வழங்கப் படும்.

| இறக்கும்போது வயது. | பாதுகாப்புக்குரிய வைப்புத் தொகை. |
|---|---|
| வருடம் 18 - 54 | 100 % |
| வருடம் 55 - 59 | 75 % |
| வருடம் 60 - 64 | 50 % |
| வருடம் 65 - 69 | 25 % |

இலாபப் பங்கீடு தொடர்பான உரிமைகளை மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பின் கடன் அந்நியோன்ய உதவி உறுதித்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட நடைமுறைகளையே இதற்கும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(தயவு செய்து கடன் அந்நியோன்ய உதவி வேலைத் திட்டத்தின் கீழ் உரிமைக் கோரிக்கை செய்யும் முறையைப் பரிசோதிக்கவும்).

(தொடரும்)

## சிக்கனச் சிரிப்பு

அப்பா!

என்னடா மகனே?

''என்னுடைய சட்டையெல்லாம் ரொம்பச் சின்னதாகி இறுக்கிப் பிடிக்கிறது. வேறு சட்டைகள் வாங்கித்தர வேண்டும்.''

"போடா வேறே வேலையில்லை? சில நாள் சாப்பிடாமல் பட்டினி கிட. உடம்பு இளைக்கும். சாப்பாட்டுச் செலவும் மிச்சம்; புதுச் சட்டை வாங்கவேண்டிய காசும் மிச்சம்.''

ஃஃஃ

ஒரு இளைஞன் தனது தலைமயிரை மொட்டையடிக்க எண்ணிச் சலூனுக்குச் சென்று கேட்டான்.

''மொட்டையடிக்க எவ்வளவு காசு?

''ஆறு ரூபா''

''ஷேவிங் செய்ய?''

''மூன்று ரூபா''

சரி அப்படியாயின் என் தலையை ''ஷேவ்'' பண்ணி விடு!

## நல்முத்துக்கள்

### சாதி பற்றி சில பெரியார்கள்

★ நன்ருக சிந்தித்துப் பார்த்தால் சாதி இனம் என்னும் வித்தியாசங்கள் எல்லாம் வெறும் கற்பனைகள் என்று விளங்கும்.

(காந்தி அடிகள்)

★ கடவுள் ஒவ்வொரு குழந்தையையும் பணக்காரன் வீட்டுக்கும் சரி ஏழை வீட்டுக்கும் சரி அம்மணமாகத்தான் அனுப்பி வைக்கின்ருர். இதில் இருந்து கடவுளைப் பொறுத்தவகையில் மனிதனுக்கு மனிதன் எவ்வித வித்தியாசமும் பாகுபாடும் கிடையாது.

(விநோபாஜீ)

★ உலகத்தில் எல்லா சாதியாரிலும் வகுப்புக்கள் உண்டு ஆனுல் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியை துர்வலப் படுத்தி விடுமானுல் அதிலிருந்தும் நம்மைக் குறைவாக நடத்துதல் அந்நியர்க்கு எளிதாகிறது.

(மகாகவிபாரதியார்)

பொன்னையா - ரஞ்சன்
நாகதாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடங்கள்

## பிரதேச நிலைய பணிப்பாளர்

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் தலைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

கல்வித்தகைமை :- வர்த்தகம் / கணக்கியல் / பொருளியல் / வர்த்தகமும் முகாமைத்துவமும் சமூகவியல் / கல்வி / புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களில் ஏதாவதொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவம்:- கிராமிய கொடுகடன் திட்டம், சமூக அபிவிருத்தித் திட்டம் வயது வந்தோர் கல்வித் திட்டம், கூட்டுறவுக் கல்வி ஆகிய துறைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது 5 வருடமாவது முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் கடமையாற்றும் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:- 25 வரு — 45 வரு.

சம்பளம்:- மாதமொன்றுக்கு ரூபா 2500/- குறையாது. தகைமை, அனுபவத்திற்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 30-10-1988ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுச் செயலாளர், இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், இல 3/3 எட்மண்டன் ரோட், கொழும்பு 6 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

## திட்ட முகாமையாளர்

**PROJECT MANAGER**

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன கொடபலவத்த தோட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து திட்ட முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை:- குண்டசாலை விவசாய நிறுவனத்தில் அல்லது விவசாய தொழில் நுட்பக் கல்லூரியின் உயர்கல்வி பெற்ற டிப்ளோமா அல்லது சான்றிதழ்.
*ஆங்கிலத்தில் கடமையாற்றும் ஆற்றல் இருக்க வேண்டும்.

அனுபவம்:- தோட்டங்களில் உதவி தோட்ட முகாமையாளராக கடமையாற்றிய 3 வருட அனுபவம், தோட்டப் பகுதியில் கடமையாற்றி இளைப்பாறியவர்களின் விண்ணபபங்களும். ஏற்கப்படும்.

வயது:- 25 வருட - 45 வருடம்

சம்பளம்:- பேசித் தீர்மானிக்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 2000/-க்கு குறையாது)

விண்ணப்ப முடிவுத் திகதி:- 30-10-1988.

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:-
பொதுச் செயலாளர்,
இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின்-
சம்மேளனம்.
இல. 3/3 எட்மண்டன் ரோட்,
கொழும்பு - 6.

## பிரதம நிதி உத்தியோகத்தர்

**CHIEF FINANCIAL OFFICER**

கல்வித் தகைமை-: வர்த்தகமும் முகாமைத்துவமும் / கணக்கியல் / வர்த்தகமும் / நிதியும் / புள்ளிவிபரவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவம்:- திட்ட முகாமைத்துவம் / முதலீட்டுத் திட்டம் இரண்டில் ஏதாவது ஒரு துறையில் அரச / தனியார் / கூட்டுறவு அமைப்பில் கடமையாற்றிய 5 வருட அனுபவம். ஆங்கிலத்தில் கடமையாற்றும் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:- 25 வரு - 45 வருடம்.

சம்பளம்:- ரூபா 2500/- அனுபவத்திற்கும் தகைமைக்குமேற்ப சம்பள அதிகரிப்பு செய்யப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 30-10-1988.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
பொதுச்செயலாளர்,
இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின்
சம்மேளனம்.
இல. 3/3 எட்மண்டன் ரோட்,
கொழும்பு - 6.

## நிதி உத்தியோகத்தர் / பயிற்றுநர்

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட சமாசங்களின் நிதி அமைப்பு, கொடுகடன் திட்டப் பிரிவு, முகாமைத்துவப் பகுதி போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு, மேற்படி துறைகளில் அனுபவமும், தகைமையுமுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

கல்வித் தகைமை:- வர்த்தக முகாமைத்துவம் / பொருளியல் / கணக்கியல் / புள்ளிவிபரவியல் / வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெற்ற பட்டம்.
× ஆங்கிலத்தில் பூரண அறிவு கொண்டிருத்தல் வேணடும்.
× சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில், சமாசத்தில் கடமையாற்றுபவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது:- 20 வரு - 45 வருடம்.

சம்பளம்:- ரூபா 2000/- அனுபவம், தகைமைக்கேற்ப சம்பள அதிகரிப்பு செய்யப்படும.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 30-10-1988

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய - முகவரி:-
பொதுச் செயலாளர்
இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு
சங்கங்களின் சம்மேளனம்,
இல 3/3 எட்மண்டன் ரோட்.
கொழும்பு-06

## உதவிச் செயலாளர்கள்

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன அங்கத்துவ மாவட்ட சமாசங்களின், உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டங்களுக்கான வங்கிகட்கு உதவிச் செயலாளர்களை நியமிப்பதற்கு பின்வரும் மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | மன்னார் | கல்முனை. |
| கிளிநொச்சி | வவுனியா | |
| முல்லைத்தீவு | மட்டக்களப்பு | |

கல்வித் தகைமை : க. பொ. த. உ/த பரீட்சையில் கணக்கியல்/வர்த்தகம்/பொருளியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்று உட்பட 3 பாடங்களில் பெற்ற சித்தி அல்லது

க. பொ. த. சா/த பரீட்சையில் 3 திறமை சித்திகளுடன் 5 பாடங்களில் சித்தியடைந்து இருப்பதுடன், 2 வருடம் மாற்றுமுகவராகக் கடமையாற்றிய அனுபவம்.

வயது : 18-30 வருடம்.

சம்பளம் :- ரூபா 1000/- தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப சம்பள அதிகரிப்பு செய்யப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 30-10-1988.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

பொதுச் செயலாளர்,
இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு
சங்கங்களின் சம்மேளனம்.
இல. 3/3, எட்மண்டன் ரோட்,
கொழும்பு-06.

மாதிரி விண்ணப்பப் படிவம்

### உதவிச் செயலாளர் பதவி

மாவட்டம்: ..............................

உதவி அரசாங்க அதிபர் பிரிவு: ..............................

01. முழுப் பெயர் : ..............................

02. முகவரி : ..............................

03. பிறந்த திகதி : ............ வரு ............ மாதம் ............ தினம்

04. கல்வித் தகைமை : ..............................

05. அனுபவம் : ..............................

06. வேறு தகைமை : ..............................

மேற் குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியானதும், உண்மையானதும் என அத்தாட்சிப் படுத்துகிறேன்.

திகதி கையொப்பம்.

## தெற்கிலிருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஓராண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அவர் அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறக்கும் பொழுது வயது 56. நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாகிய திரு. தஹம்சிரி அவர்களது மனைவியும் ஓர் ஆசிரியை ஆகும்.

பம்பரந்த தெற்கு சிகசு சங்க ஆரம்பத்துடன் சிகசு சங்க அமைப்புடன் இணைந்த அவர் 15 ஆண்டுகளாக அதன் கௌரவ தலைவர் பதவியை வகித்துவந்தார்.

1983 இல் மாத்தறை மாவட்ட சிகசு சங்க சமாசத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாகச் செயலாற்றிய திரு. தஹம்சிரி சிகசு சேவையை முழு மாவட்டத்திற்குள் விரிவடையச் செய்து அதன் தலைவராகஇருந்து 1983 தொடக்கம் இறக்கும் வரை உன்னதமான தலைமைத்துவத்தை வகித்தார்.

சிகசு சங்க அமைப்பின் தேசிய மட்டத்திலான தலைமைத்துவத்தை அளிப்பதில் அவர் வகித்த இடத்தை எந்த ஒரு கூட்டுறவாளரும் மறக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை.

1979 இல் சிகசு அமைப்பில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய கேகாலை தீசல்ல வரலாற்றுச் சிறப்பு மிக்க சம்மேளனத்தில் தென் மாகாணத்தை பிரதிநிதித்துவஞ் செய்து தேசிய இயக்கத்திற்கு உயிர் நாடியை அளிப்பதற்காகப் பெருந் தியாக சிந்தனையுடன் செயலாற்றிய விதம் எமது ஞாபகத்தில் உள்ளது.

1983 தொடக்கம் இன்று வரை சிகசு சம்மேளனத்தின் பணிப்பாளர் சபையின் கௌரவ பணிப்பாளராகவும் பலவித உப குழுக்களிலும் கருத்தரங்குகளிலும் பணியமர்வுகளிலும் பேரார்வம் கொண்ட ஒரு கூட்டுறவாளரின் குணதிசயங்களை எடுத்துக் காட்டி அவர் அருஞ் சேவையில் ஈடுபட்டார்.

## மக்களுக்கு நிரந்...

(1ம் பக்கத்தொடர்)

செய்யப்பட்டால் அதில் வெற்றி காணலாம் எனத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

பயிற்சி நிலையப் பணிப்பாளர், திரு. எஸ். இராஜரெட்னம் அவர்கள் தனது உரையில் முதலாவதாக திரு. எஸ். ஞானப்பிரகாசம் (முன்னாள் பயிற்சி நிலையப் பணிப்பாளர்) அவர்க்களுக்கு அனைத்து கூட்டுறவாளர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்ததுடன், இப் பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர் என்றும் அவர் இன்று இங்கு கலந்து கொள்ளாவிட்டாலும், அவரது அயராத முயற்சிக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் பயிற்சியின் நோக்கம் தொடர்பாகவும் பயிற்சி நிலையத்தின் குறிக்கோள் தொடர்பாகவும் எடுத்துக் கூறினார். மேலும் வட மாகாணத்திலுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களையும் மாற்று முகவர்களையும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள், சிகசு கூட்டுறவில் ம்பந்தப் பட்ட ஏனையோர்களையும் சிறந்த முறையில் பயிற்றுவித்து இவர்கள் மூலம் வறுமைக் கோட்டில் இருக்கும் மக்களிடையே சிக்கனத்தையும், சேமிப்பையும் ஊக்குவித்து அவர்களை சமூக பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதே ஆகும் என்றார்.

இப் பயிற்சி நெறியில் பரந்தன் கூட்டுறவு அலுவலகத்தைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தராஜா, முல்லைத்தீவு சிகசு மாவட்டச் செயலாளர் திரு. என். திருநாமம் என்போரும் விரிவுரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
REC 1988-10-
Periodicals
Library

# நாணயம்

ஆவணி-புரட்டாதி 1988
மலர் : 2
இதழ் : 5
விலை : ரூ. 2/-

## "மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய 'சிகசூ' சங்கமே பொருத்தம்"

''வறிய மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எம் மத்தியிலே காணப்படும் அமைப்புக்களில் இக்கன கடனுதவு கூட்டுறவு சங்கமே பொருத்தமானது'' மேற்கண்டவாறு, அண்மையில் பேய்த்தாளை, வாழைச்சேனை ஸ்ரீ லக்ஸ்சுமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண வெளிக்கள உத்தியோகத்தரும் பிரதேச நிலையத் தற்காலிகப் பணிப்பாளருமான திரு. எஸ். இராஜரெட்ணம் குறிப்பிட்டார்.

நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட பிரதேசப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''வறிய மக்கள் வறுமையில் இருந்து மீள வேண்டுமாயின் கிடைக்கின்ற வருவாயில் கொஞ்சமாவது சேமிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தனித்துச் சேமிப்பதிலும் விட சங்கமாகச் சேர்ந்துசேமிப்பதன் மூலம் தேவையான பண வசதியை உருவாக்கிக் கொள்வதுடன், தொழில் முயற்சிகளை புதிதாக ஆரம்பிக்கவும் செய்கின்ற சேமிப்பிலிருந்து, தொழிலை மேலும் விரிவுபடுத்தவும் முடியும்'' என்று கூறினர்.

திரு. க. இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வாழைச்சேனை ப. நோ. கூ. சங்ககல்வி உத்தியோகத்தர் திரு. எஸ் கணேசனும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் நோக்கம், அமைப்பு முறை, கடன் திட்டங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் சங்கச் செயலாளர் திரு. த. அழகரெட்ணம் அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

# கடன்வழங்கும்பிரிவிலிருந்து இம்முறை 16 இலட்சங்கள்

இலங்கை சிக்கன, கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் கடன் வழங்கும் பிரிவு 1988 ஜுன் மாதத்துக்கான தனது வழிநடத்தும் பணிகள் தொடர்பான அறிக்கையில், அம் மாதத்திற்குள் சிகசூ மாவட்டச் சமாசங்களுக்கு பல வித தேவைகளுக்காக ரூபா 16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

### வவுனியா மாவட்ட சிகசூ சமாசத்திற்கு ரூபா 660,000

22 சிகசூ சங்கங்களைச் சேர்ந்த 803 அங்கத்தவர்கள் சார்பாக வெங்காயச் செய்கைக்காக விவசாய நெறித் திட்டக் கடனாக மேற் கூறிய தொகை விடுவிக்கப்பட்டது.

ஆறு மாத காலத்துக்காக வழங்கப்பட்டுள்ள இக்கடன் 15% வட்டியின் மீது கொடுக்கப்பட்டுள்ளது.

### அநுராதபுரம் மாவட்ட சிகசூ சமாசத்திற்கு ரூ. 99,000

அநுராதபுரம் மாவட்ட சிகசூ சமாசத்தின் அலுவலர் குழுவினர், உதவிச் செயலாளர்கள் ஆகியோருக்கான சம்பளம், படி, மிதிவண்டிக் கொள்வனவு, அலுவலகங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வருதல் வளைய வங்கிகளை ஆரம்பித்தல், கல்வி, பயிற்சியளிப்புப் பணிகள் ஆகிய நடவடிக்கைகளுக்காக இக்கடன் தொகை பயன்படுத்தப்படும்.

ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதும் 6% வட்டியை அறவிடுவதும் இக்கடனுக்கான நிபந்தனையாகும்.

''ஹீவோஸ்'' நெறித் திட்டத்தின் கீழ் இக்கடன் கிடைக்கப் பெற்றுள்ளது.

### மொனராகல மாவட்ட சிகசூ சமாசத்திற்கு ரூபா. 50,000

முத்துக்கண்டிய திட்டத்தின் 20 ஆம் இயக்க முத்துக்கண்டிய சிகசூ சங்கத்தின் 35 அங்கத்தவர்களின் தானியப் பயிர்ச் செய்கைக்காக விவசாய நெறித் திட்டக் கடனாக இத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

ஆறு மாத காலத்திற்குள் 6% வட்டியுடன் செலுத்த வேண்டும் என்பது இக்கடனின் நிபந்தனைகள் ஆகும்.

அவுஸ்ரேலிய தூதராலய ஒத்துழைப்பு இதற்காகக் கிடைக்கப் பெற்றுள்ளது,

### கல்முனை மாவட்ட சிகசூ சமாசத்திற்கு ரூபா ரூ. 300,000

அம் மாவட்டத்தின் 13 சங்கங்களைச் சார்ந்த 328 அங்கத்தவர்களுக்கான விவசாயக் கடன் இதன் மூலம் வழங்கப்படுகின்றது.

ஆறு மாதங்களுக்குள் 15% வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பது இதன் நிபந்தனையாகும்.

கல்முனை மாவட்ட சமாச அலுவலகத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ரூபா 75,000/- க்கான ஒரு கடன் தொகையும் இதற்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

### கல்ஓயா மிட்டியாவத (அம்பாறை, மாவட்ட சமாசத்திற்கு ரூ. 100,000

கனடா அல்பட்டா பிராந்திய கூட்டுறவுச் சமாசத்தினதும் சிகசூ சம்மேளனத்தினதும் ஒத்துழைப்புடன், அம்பாறை மாவட்டத்தின் கொஹொம்பகான பரணிக்கம, நாமல் ஓயா ஆகிய இரு கிராமப் பிரதேச மக்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் இக்கடன் தொகை அவ்விரு சங்கங்களின் 40 ஆரம்பக் குழுவினருக்கு வழங்கப்படுகின்றது.

இங்கு சிறப்பு அம்சமாக அமைகின்றது யாதெனில், ஐந்து ஆண்டு முழுவதிலும் அவ்விரு சங்கங்களுக்குள் இப்பணம் சுழல்வதன் மூலம் பெருந்தொகையான அங்கத்தவர்களுக்கு இக்கடனின் நன்மை உரித்தாகுவது ஆகும்.

ஐந்து ஆண்டுகளுக்குள் 6% வட்டி மாத்திரம் அறவிடப்படுகின்ற இக்கடனை அக்காலக் கடைசியில் திருப்பிச் செலுத்திவிட வேண்டும்.

### தேசிய கூட்டுறவுச் சபைக்கு ரூ. 4,50,000

மகாவலி அபிவிருத்திப் பகுதிகளில் கூட்டுறவு முன்னோடித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற மூன்று விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 150 அங்கத்தவர்களுக்குத் தேவையான உள்ளீடுகளைப் (inputs) பெற்றுக் கொள்வதற்காக இக்கடன் விடுவிக்கப்படுகின்றது.

மூன்று மாதங்களுக்குள் 15% வட்டியுடன் செலுத்திவிட வேண்டும் என்பது இதற்கான நிபந்தனையாகும்.

## மன்னார் மாவட்ட சமாசத் தலைவர் அங்கத்தவருக்கு அழைப்பு

மன்னார் மாவட்டத்தில் புதிதாகசமாசக்காரியாலயம்ஆரம்பித்ததுடன் கிராமிய நிதியினை ஒருங்கிணைத்து அங்கத்துவசங்கங்களினதும் அங்கத்தவர்களினதும் பொருளாதார விருத்திக்கு உதவுவதற்கும் ஏனைய முன்னோடிக் கூட்டுறவு அமைப்புக்களைப் போன்று செயற்திறனுடன் தொழிற்படுவதற்கும் தங்களதும் தங்களது சங்க அங்கத்தவர் மற்றும் நிதி வசதி படைத்தவர்களதும் ஆதரவினை பூரணமாக எதிர்பார்க்கின்றோம்.

இதுவரை காலமும் சமாசத்தினால் பிற்போடப்பட்டுவந்த, அங்கத்துவ சங்கங்களின் சேமிப்புத் திட்டத்தினை தங்களுக்கு வழங்கப்பட்ட சமாசத்தின் மாதிரி நடைமுறை விதிக்கொப்ப சேகரிக்கப்படவுள்ளது. சமாசத்தில் அங்கத்துவ சங்கங்களின சேமிப்பு சக்திகளைக் கொண்டே சமாசத்திற்கு பிற நிறுவனகளினால் வழங்கப்படவிருக்கின்ற உதவிகளும், கடன் வசதிகளும் நிச்சயிக்கப்பட்டு வருகின்றன. எனவே எமது மாவட்ட சங்கங்களும் அங்கத்தவர்களும் ஏனைய மாவட்டங்களுக்கு சளைத்ததல்ல என்பதனை வெளிக்காட்டும் வகையில் ஒத்துழைப்பீர்களென எதிர்பார்க்கின்றோம்.

சமாசத்தில் சங்கங்கள் வைத்துள்ள சேமிப்புகளின் அடிப்படையிலேயே சமாச நடைமுறை விதி 3.3.4.4. க்கு அமைவாக சங்கங்களுக்கு வழங்கக் கூடிய உச்சக்கடன் எல்லை தீர்மானிக்கப்படவுள்ளது. அதற்கு மேலாக சமாசத்தினால் சங்கங்களுக்கு கடன் உதவுதல் முடியாத ஒரு நிலை ஏற்படாதவாறு சங்கங்கள் சேமிப்புகளை சமாசத்தில் வைத்து வருதல் சிறப்பானதாகும்.

கூடிய விரைவில் மன்னார் மாவட்ட கூட்டுறவு வங்கி செயற்பாடு ஆரம்பிக்கப்படவுள்ள நற்செய்தியினைத் தெரியப்படுத்த விரும்புவதுடன் அதன் மூலமாக உள்ளகக் கடன் வசதிகளும் வழங்கப்படவுள்ளது.

எனவே சகல அங்கத்துவ சங்கங்களிடமிருந்தும் அந்தந்தச் சங்கங்களின் விருத்தியினையும் சமாசத்தினதும் மாவட்டத்தினதும் முன்னேற்றத்தினையும் கருத்திற்கொண்டு ஆரம்பத்தில் தங்களது சங்கத்தின் சார்பில் ரூ. 1000/- சமாச நடைமுறைவிதி 4.1.2.3. (4க்கு அமைவாக) சமாசத்தில் கட்டாய சேமமாக வைப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

## சர்வதேச கண்ணோட்டம்

### மகாநாட்டின் பின்னர் சீனச் சுற்றுலா

யப்பான் ரோக்கியோ நகரத்திற்கு அண்மையில் சென்ற ஆசிய நாடுகளின் கூட்டுறவுத் தலைவர்கள் ஆசிய சிகசூ சங்கச் சம்மேளனத்தின் 88-ம் வருடாந்த கூட்டத்தை நடத்தினர்.

ஆசிய சிகசூ சங்க சம்மேளனத்தின் அமைப்பு முறை, அங்கத்துவ நாடுகளுடன் செயற்பாட்டு ரீதியான தொடர்பைப் பேணி வருவதற்கான உபாய வழித் திட்டம் என்பன தொடர்பாக இம்முறை அதன் பிரதிநிதிகளின் பரவலான கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிய சிகசூ சங்க சம்மேளனத்தின் 1989-ம் அமர்வை எதிர்வரும் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பெருந் தொகையான அங்கத்தவர்கள் கலந்து கொண்ட சீனாவுக்கான சுற்றுலாவின் போது அந் நாட்டு சிகசூ சங்கங்களின் செயற்பாடு பற்றியும் அதன் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் அப் பிரதிநிதிகள் ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

சீனாவில் இன்றுவரை சுமார் ஆறு லட்சம் சங்கங்கள் செற்பட்டு வருகின்றன என அங்கு குறிப்பிடப்பட்டது. இச் சங்கங்கள் கிராமிய, நாகரிக என்றவாறு இரு பிரிவுகளாகப் இயங்குகின்றது.

இப்பத்திரிகை இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்திற்காக இல. 201, டாம் வீதி, கொழும்பு-12இல் அமைந்துள்ள குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org